**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 24.04.2023**
**--------------------------------------**

**<u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>**

**<u>கூட்டம் எண். 14</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் சித்திரை 14 ஆம் நாள் 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27.04.2023ம் தேதியன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்.1</u>

சாத்தூர் நகராட்சியில் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை முன்னிட்டு திட்டப்பணிகளின் தரத்தினை பணிகள் நடைபெறும் இடத்தில் கண்டறிய கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது. அதனை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.25,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. G.I Sieves 45 Cm Dia
2. G.I Sieves 30 Cm Dia
3. Gun Type Thermometer
4. Core Cutter & Dolly with Rammer
5. Concrete Cube mould cast iron (15cm x 15cm x 15cm)
6. Road Measure

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண்.618/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.230, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறுஞ்செய்தியின்படி உலக தண்ணீர் மற்றும் உலக வனநாள் தினத்தை முன்னிட்டு சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட ஆறு இடங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் விளம்பர பலகையினை நிறுவிய வைகைக்கு செலவு தொகை ரூ.16,800/-னை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண்.213/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.231, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

சாத்தூர் நகராட்சியில் உள்ள தமிழ்நாடு தீயணைப்பு - மீட்புப்பணிகள் துறை 16.03.2023-ன்படி நகராட்சி அலுவலகத்தை ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட தீ தடுப்பு சாதனங்கள் அமைக்குமாறு கடிதத்தில் அறிவுறுத்தப்படுகிறது. அதன்படி தீ தடுப்பு சாதனங்களை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ABC 6 Kg | - | 7 No's |
| 2. | $Co_2$ 4.5 Kg | - | 2 No's |
| 3. | ஓஸரீல் ஓஸ் தீ- வாளிகள் | - | 8 No's |

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண்.224/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.232, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

சாத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் அருகில் உள்ள கிராமத்தினர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள எஸ்.ஆர் பூங்காவில் தைப்பொங்கலுக்கு மறுநாள் மணல் மேட்டு திருவிழாவாக சீரும் சிறப்புமாக கொண்டாடப்படும் அதுசமயம் நகராட்சியினால் ஆற்றங்கரையோரம் உள்ள முட்புதர்களை அப்புறப்படுத்தி சுத்தம் செய்து தரப்படுவது வழக்கம். தற்போது கொரோனா மற்றும் விசக்காய்ச்சல் பரவுவதால் ஒரே இடத்தில் பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் பொருட்டு நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 6 பூங்காக்களை

JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்து பொதுமக்கள் மணல் மேட்டு திருவிழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் பணியினை மேற்கொள்ளுவதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் நகராட்சி பதிவு பெற்ற கீழ்க்கண்ட 2 ஒப்பந்தக்காரர்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | டி.சுந்தரமகாலிங்கம் 1 மணி நேரத்திற்கு JCB வாடகை | - | ரூ. 900 |
| | டிரைவர் தினப்படி | - | ரூ. 500 |
| 2. | பி.சுப்பாராஜ் 1 மணி நேரத்திற்கு JCB வாடகை | - | ரூ. 960 |
| | டிரைவர் தினப்படி | - | ரூ. 600 |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள டி.சுந்தரமகாலிங்கம் ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.224/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.233, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.5</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு சுலீஸ் வால்வு பொருத்தும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கு தயா செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. மாரியம்மன் கோவில் தெரு
2. வடக்கு ரத வீதி
3. முனிசீப் கோர்ட் தெரு
4. ஆர்.சி வடக்கு மற்றும் தெற்கு தெரு

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.289/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.234, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

சாத்தூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 11.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.07 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.146/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.235, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

சாத்தூர் நகராட்சி பகுதியில் அடிபம்பு மற்றும் விசைபம்புகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 11.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.04 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.07 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.147/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.236, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.8

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 11.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.148/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.237, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.9

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோகத்திற்கான தேவையான லிக்யூடு குளோரினேசன் சப்ளை செய்ய 11.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Sri Sabari Engineering - மதிப்பீட்டை விட 0.58 சதவீதம் குறைவு
2. M/s. Rajaganpathi Engineering Works - மதிப்பீட்டை விட 0.58 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s.Sri Sabari Engineering (மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.149/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.238, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.10

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட காட்டுத் தெரு கான்வென்ட் பள்ளி பின்புறம் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு குடிநீர் சப்ளை மெயின்-ல் PVC பைப் மற்றும் இதர சாமான்கள் பொருத்தும் பணியினை

மேற்கொள்ளவும் அதற்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.311/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.239, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.11

சாத்தூர் நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற கூட்டம், பணித்திறன் ஆய்வுகூட்டம் மற்றும் கலந்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. கூட்டத்தில் எடுத்துரைக்கும் கேள்வி பதில்கள் சரியாக கேட்பதில்லை. எனவே நகர்மன்ற கூட்ட அரங்கிற்கு புதியதாக ஸ்பீக்கர் மற்றும் 2 மைக்குகள் வாங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.60,000/- மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

உத்தேச செலவு தொகை ரூ.60,000-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.312/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.240, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.12

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட இருக்கண்குடி நீர்உந்து நிலையத்திலிருந்து சாத்தூருக்கு வரும் 200 MM Di Pumping Main இரயில்வே பாலத்திற்கு கீழ் பகுதியில் Supporting Column பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 21.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவு
2. திரு.எம்.கண்ணன் - மதிப்பீட்டை விட 0.2 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.பி.சுப்பாராஜ் (மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்

அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.231/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.241, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு சுலீஸ் வால்வு பொருத்தும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 21.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.04 சதவீதம் குறைவு
2. திரு.எம்.கண்ணன் - மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.பி.சுப்பாராஜ் (மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.289/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.242, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய வாகனங்கள் பொது ஏலம் மூலம் விடுவதற்கான ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழ் தினகரனில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.6,703- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.403/2019/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.243, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.15

சாத்தூர் நகராட்சியினால் புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குடியிருப்பு கட்டிடங்களுக்கு வீட்டு இணைப்பு வழங்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.19,635/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.155/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.244, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.16

அருப்புகோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான புதிய கூட்டு குடிநீர் திட்டம் குறித்து கலந்து ஆலோசனை கூட்டம் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால வாரிய பொறியாளர்களுடன் 05.04.2023 அன்று நடத்தப்பட்டது. அதனை வீடியோ மூலம் பதிவு செய்யப்பட்டது. அதற்கான செலவின தொகை ரூ.3000/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.785/2017/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.245, நாள்: 27.04.202**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.17

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் இருக்கும் கனரக வாகனம் TN 67AH 6760-க்கு நான்கு டயர்கள் வாங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | Sri Guru tyres, sattur | ரூ.45900 |
| 2 | Sri perumal samy tyres, sattur | ரூ.46750 |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலில் Sri guru tyres நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Sri guru tyres, Sattur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 831/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.246, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.18

இந்நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 03.04.2023-ன்படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான குப்பை அகற்றும் இலகுரக வாகனம் டாடா ஏஸ் TN67AJ 6058-ல் இன்ஞ்ஜின் பழுதடைந்ததால், புதிதாக மாற்றம் செய்வதற்கு டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற சரவணா மோட்டார்ஸ், விருதுநகர் பணிமனையில் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தினசரி குப்பை அகற்றும் பணிகள் பாதிப்படைவதால் அவசர அவசியம் கருதி டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற சரவணா மோட்டார்ஸ், விருதுநகர் பணிமனையில் இன்ஞ்ஜினை மாற்றம் செய்வதற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0263//2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.247, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.19

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான குப்பை அகற்றும் இலகுரக வாகனம் டாடா ஏஸ் TN67AJ 6058-ல் இன்ஞ்ஜின் பழுதடைந்ததால் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதியும் உடனடியாக மேற்படி வாகனத்தின் இன்ஞ்ஜினை புதிதாக மாற்றம் செய்வதற்கும், டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்படி பணிகளை

மேற்கொள்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.45000/-க்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தினசரி குப்பை அகற்றும் பணிகள் பாதிப்படைவதால் அவசர அவசியம் கருதி டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0263//2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.248, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.20</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை முறைகள் ந.க.எண்.3604/2021/அ3, நாள்:17.03.2023ன்படி, விருதுநகர் மாவட்டம் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்-2022ம் ஆண்டு நடைபெற்ற சாத்தூர் நகராட்சிக்கு CCTV Camera, Video Graphic and Live Web Streaming செய்யும் பணிக்கு M/S. SNR EDATAS PRIVATE LIMITED, HYDERABAD அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதியிலிருந்து மேற்படி பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் கூடுதலாகும் செலவினத் தொகை ரூ.84,960/-ஐ ECS மூலமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வங்கி கணக்கு எண்.3103810405 என்ற எண்ணிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1387/2017/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.249, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.21</u>

அரசாணை (நிலை) எண்.452 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.08.1990-ன்படி ஐந்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நிலுவையின்றி 100% வசூல் செய்து வரும் வருவாய் உதவியாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் இரண்டு மாத ஊதிய ஊக்கத் தொகையும், ஐந்தாண்டுகளுக்கு குறைவாக நிலுவையின்றி 100% வசூல் செய்து வரும் வருவாய் உதவியாளர்களுக்கு ஒருமாத ஊதிய ஊக்கத் தொகையாகவும் வழங்க வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி வருவாய் உதவியாளர்கள் 2022-2023ம் நிதியாண்டில் அவரவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களை 100% வசூல் செய்து சாதனை புரிந்துள்ளனர் என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

இந்நகராட்சி வருவாய் உதவியாளர்கள் 2022-2023ம் நிதியாண்டில் அவரவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களை 100% வசூல் செய்தமைக்கு அரசாணையின்படி ஒருமாத அடிப்படை ஊதியம் ஊக்கத் தொகையாகவும் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளனர். இந்நகராட்சி 2022-2023ம் நிதியாண்டில் வருவாய் உதவியாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களை 100% வசூல் செய்தமைக்கு ஒருமாத அடிப்படை ஊதியம் ஊக்கத் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வருவாய் உதவியாளர்களின் பெயர் திரு/திருமதி | வார்டுகள் | அடிப்படைஊதியம் 3/2023 ரூ. | ஊக்கத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே. ரவிச்சந்திரன் | 1,2,3,8,9,10,11,14 | 42100 | 42100 |
| 2 | எஸ். முத்துலட்சுமி | 4,5,15,20,21 | 19500 | 19500 |
| 3 | பி, நாகராஜ் | 6,7,13,22,23,24 | 25400 | 25400 |
| 4 | நா. ஹரிஹரசுதன் | 12,16,17,18,19 | 19500 | 19500 |
| | மொத்தம் | | **106500** | **106500** |

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். .

(ந.க.எண்.322/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.250, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.22

2022-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் 1998-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023ல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84 (1)ல். Five Precent of the net Property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an Incentive, who has paid the property tax within thirty days from the date of commencement of the half - year அதன்படி,சொத்து உரிமையாளர்கள் தங்களது 2023-20024ம் முதல் அரையாண்டிற்கான சொத்து வரியினை 30.04.2023 ஆம் தேதிக்குள் சொத்துவரி செலுத்தும் உரிமையாளர்களுக்கு 5% ஊக்கத்தொகை பெற அறிவிப்பினை விளபைரம் செய்த வகைக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். .

(ந.க.எண்.323/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.251, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.23</u>

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கட்டிடங்கள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும் அரசு பொறியியல் கல்லூரியில் அதற்கான சான்றினை பெற்று (Stability Certificate) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் அனுமதி பெற்ற பின்பு கீழ்க்கண்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. காமராஜபுரம் Complex
2. ஆணையாளர் பழைய குடியிருப்பு
3. பழைய நகர்மன்ற கூட்ட அரங்கு (தெற்கு ரத வீதி)

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) உரிய சான்றினை பெறவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.287/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.252, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.24</u>

சாத்தூ நகராட்சி பகுதிக்குட்பட்ட Post Office அருகே உள்ள சந்தில் உள்ள சிறுநீர் கழிப்பறை மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. அதனை இடித்து அப்புறப்படுத்தி புதிய சிறுநீர் கழிப்பபறை அமைக்கும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2.00 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.288/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.253, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.25

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட நேருஜி தெருவில் 2 மினி பவர் பம்ப் சிமெண்ட் தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளது. அதனை பழுதடைந்து பகுதிகளில்இடித்து சரி செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.85,000-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.321/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.254, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.26

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பழைய மினி பவர் பம்ப்கள், சிமெண்ட் தொட்டிகள் இடிந்த நிலையிலும் மேலும் பொதுமக்களுக்கு இடையூராக தெருக்களில் உள்ள சிமெண்ட் தொட்டிகள் இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,50,000-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.320/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.255, நாள்: 27.04.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.27

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள தொடக்கப் பள்ளியில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 06.04.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.04 சதவீதம் குறைவு
2. திரு. மாரியப்பன் & கோ - மதிப்பீட்டை விட 3.7 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.224 நாள்: 27.03.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.229/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.256, நாள்: 27.04.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**